(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 12.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 மார்ச் 21 வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ ஹரின் பிரனாந்து,** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலும் அமுனுகம,** முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரேமலால் ஜயசேக்கர,** துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ திஸகுட்டி ஆரச்சி**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ அகில எல்லாவல**

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஜகத் பிரியங்கர

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ எஸ்.சீ. முதுகுமாரண

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ நயன வாசலதிலக

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2024 மாச்சு 20 ஆம் திகதி 'சமூகப் பாதுகாப்பு உதவுதொகை (திருத்தம்)' மற்றும் 'சேர்பெறுமதி வரி (திருத்தம்)' எனும் சட்டமூலங்களில் கௌரவ சபாநாயகரினால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். "

2. **பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம்—

(i) 2019 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் LIV ஆம் பகுதியையும்;

(ii) 2020 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஒன்பதாவது தொகுதியின் XLI ஆம் பகுதியையும்;

(iii) 2021 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஒன்பதாவது தொகுதியின் XXXIX ஆம் பகுதியையும்; மற்றும்

(iv) 2022 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XLIII ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவவது தொகுதியின் XXVII ஆம் பகுதியையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) கல்வி அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுகாதார அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீலங்கா ஆட்டோமிக் எனர்ஜி போர்டின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கையை வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) மின்சக்தி மற்றும் வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ கஞ்சன விஜேசேகர சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ நாலக்க பண்டார கொட்டேகொட அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் மதியுரையின் மீதும் விதப்புரையின் மீதும் அச்சட்டத்தின் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 7 ஆம் பிரிவின் கீழ் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் உரிமமளித்தல் தொடர்பாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 10 ஆம் திகதிய 2340/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதியைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன் அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2021 ஆம் ஆண்டுக்கான களனிப் பல்கலைக்கழகத்தின் பாளி, பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆண்டறிக்கை;

(ii) 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்;

(iii) 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆண்டறிக்கை;

(iv) 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்;

(v) 2021 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்; மற்றும்

(vi) 2022 ஆம் ஆண்டுக்கான மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தொடர்பிலான குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ நாலக்க பண்டார கோட்டேகொட அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை புகையிரத திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) கம்பஹா, இஹலகம, இல. 155 இல் வதியும் திரு. எஸ்.ஏ.பி.கே. தயானந்தவினது 2023.12.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜித் மான்னப்பெரும சமர்ப்பித்தார்.

(2) (i) மாத்தளை, தென்ன, முவகல சந்தி, இல. 26 இல் வதியும் திருமதி ஏ.ஜி. நந்தா சோமலதாவினது 2023.11.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) உக்குவெல, நாகொல்ல, இல. 200/3 இல் வதியும் திரு. அநுர உபதிஸ்ஸ மல்துங்கவினது 2024.02.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) மாத்தளை, கிவுல, இல. 08 இல் வதியும் திரு. ஜி.ஜி. சனத் சந்திரகுமாரவினது 2023.11.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) பெலிகமுவ, வலகம்புர, இல. 142 இல் வதியும் திரு. எம்.ஜி.சீ. ஹர்ஷன் விஜேரத்னவினது 2023.10.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) மாத்தளை, மெட்டிஹக்க, ரங்முதுகம எனும் முகவரியில் வதியும் திரு. பி.கே.ஜி. விஜேரத்னவினது 2024.02.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(vi) நாலந்த, ஹோமாபொல, பீ 204 இல் வதியும் திருமதி டப்ளியூ.எம். குடாமெனிக்கேயினது 2023.11.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன சமர்ப்பித்தார்.

(3) மாத்தளை, மடவல, உல்பத்த, மெதிரொத, இல. 95/7 இல் வதியும் திரு. பீ.ஜி. சந்திரவங்ச பண்டாரவினது 2023.09.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ நாலக பண்டார கோட்டேகொட சமர்ப்பித்தார்.

(4) (i) கரந்தெனிய, பான்வெல்கொட எனும் முகவரியில் வதியும் திரு. எச்.ஜி. மைத்திரிசேனவினது 2023.12.17 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) ஹிக்கடுவ, பதன, சம்மர் சிட்டி, இல. 17 இல் வதியும் திரு. ஐ.ஜி.எஸ்.டப்ளியூ. ரவீந்திரவினது 2023.11.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) அம்பலங்கொட, திலகபுர, ஜன உதான கிராமம், இல. 101 ஏ யில் வதியும் திரு. சுதத் ஜயவர்தனவினது 2024.02.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்):** நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம் — 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2024 ஏப்ரல் 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் அரசாங்க நிதி பற்றிய குழு வுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1) :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2) :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2024 ஏப்ரல் 01 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்கள் சபை அமர்வு தினங்களாக இருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 3) :** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2024 ஏப்ரல் 01 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை இருக்குமாக. பி..ப. 5.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. சட்டமூலம் கொண்டுவர அனுமதி :** "இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ டீ. வீரசிங்க பிரேரித்தார். கௌரவ குமாரசிறி ரத்னாயக்க அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**10. சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை:** விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம்,— (2024 மார்ச் 19 )

"நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் மீதான முழுப் பாராளுமன்றக் குழுவில், அச்சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்மானத்திற்கு முரணாக அச்சட்டமூலத்தின் சில பிரிவுகள் நிறைவேற்றப்படுகின்றதென கௌரவ எதிர்க்கட்சி உறுப்பினர்களினால் பலத்த எதிர்ப்பு முன்வைக்கப்பட்ட நிலையிலும் அத்தகைய எதிர்ப்பினைப் பொருட்படுத்தாமல் மேற்படி உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு முரணாக அச்சட்டமூலத்தின் சில பிரிவுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஆளும் கட்சிக்கு இடமளித்தமை ஊடாகவும்;

குறிப்பாக,

(அ) மேற்படி சட்டமூலத்தின் 13 ஆம் பிரிவு அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரைக்கு முரணானதெனவும் அதற்கமைவாக அப்பிரிவு விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டுமெனவும் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் உயர்நீதிமன்ற தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் அதற்கமைவாக மேற்படி திருத்தங்களை மேற்கொள்ளாமல் சாதாரண பெரும்பான்மையுடன் மேற்படி பிரிவினை நிறைவேற்றிக்கொள்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(ஆ) மேற்படி சட்டமூலத்தின் 17 ஆம் பிரிவு அரசியலமைப்புக்கு முரணானதெனவும் அது விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ளப்பட வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் மற்றும் அப் பிரிவை முழுப் பாராளுமன்றக் குழுவில் நீக்குவதாக சட்டத்துறை தலைமை அதிபதி உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்த போதும் அப்பிரிவை எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறாகவே சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(இ) மேற்படி சட்டமூலத்தின் 20, 33(6), 34(1), 35(1) ஆம் பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணானதெனவும் அதற்கமைவாக விசேட பெரும்பான்மையுடன் அப்பிரிவுகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமெனவும் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் அவ்வாறு விதந்துரைக்கப்பட்ட திருத்தங்களை மேற்கொள்ளாமல் சாதாரண பெரும்பான்மையுடன் அப்பிரிவுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(ஈ) மேற்படி சட்டமூலத்தின் 21 ஆம் பிரிவு அரசியலமைப்புக்கு முரணானதெனவும் அதற்கமைவாக அதனை விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் மற்றும் அப்பிரிவை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான திருத்தங்களை முழுப் பாராளுமன்றக் குழுவில் முன்வைப்பதாக சட்டத்துறை தலைமை அதிபதி உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்த போதும் அவ்வாறாக செயற்படாமல் அப்பிரிவை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(உ) மேற்படி சட்டமூலத்தின் 22 ஆம் பிரிவு அரசியலமைப்புக்கு முரணானதெனவும்,

அதன்படி விசேட பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றக்கொள்ள வேண்டுமெனவும், சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தின்படி திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில், அத்தகைய திருத்தங்களை மேற்கொள்ளாது சாதாரண பெரும்பான்மையுடன் அப் பிரிவினை திருத்தம் செய்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(ஊ) மேற்படி சட்டமூலத்தின் 31 ஆம் பிரிவு அரசியலமைப்புக்கு முரணானதெனவும், அதன்படி விசேட பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றக்கொள்ள வேண்டுமெனவும், சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தின்படி திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில், அத்தகைய திருத்தங்களை மேற்கொள்ளாது சாதாரண பெரும்பான்மையுடன் அப் பிரிவினை திருத்தம் செய்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

இதனை உறுதிப்படுத்தி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினாலும், மேற்படி சட்டமூலத்தின் சில பிரிவுகளை நிறைவேற்றிக்கொள்வதில் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு இணங்க செயற்படவில்லை எனவும் அவ்வாறு செயற்பட தவறியுள்ளதால், ஏலவே அச்சட்டமூலத்தை உள்ளவாறே நிறைவேற்றிக்கொள்வதற்கு அவசியமான வாக்குகள் பாராளுமன்றத்தில் கிடைத்துள்ளனவா என்பது தொடர்பில் பாரிய சிக்கல் எழுந்துள்ளதாகவும், சபாநாயகருக்கு அவ் ஆணைக்குழுவினால் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள 2024 பெப்ரவரி 08 ஆம் திகதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும்;

அத்துடன், நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் மீதான மூன்றாவது மதிப்பீட்டின்போது எதிர்க்கட்சியின் முதற்கோலாசான், மிகத்தெளிவாக வாக்கெடுப்பைக் கோரியிருந்தபோதும், அக் கோரிக்கையை கவனத்தில் கொள்ளாமலும், வாக்கெடுப்பு ஒன்றினை வழங்காமலும் அச்சட்டமூலம் மீதான மூன்றாவது மதிப்பீட்டை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றிக்கொள்ள இடமளித்தமை ஊடாகவும்;

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் மீதான முழுப் பாராளுமன்றக் குழுவில், அச்சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு முரணாக, சில பிரிவுகளை ஆளும் கட்சி நிறைவேற்றிக் கொண்டுள்ளதால் அது தொடர்பில் ஆழமாக ஆராயும் வரை அச்சட்டமூலத்தை சட்டமாக்குவதற்கான சான்றுரையை அளிக்க வேண்டாமென எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் சபாநாயகரிடம் 2024 பெப்ரவரி 01 ஆம் திகதி நடைபெற்ற கட்சித் தலைவர்களின் விசேட கூட்டத்தின்போது கோரிக்கை விடுத்திருந்த நிலையில், அக் கோரிக்கையை கவனத்தில் கொள்ளாது அச்சட்டமூலத்தை சட்டமாக்குவதற்கு சான்றுரை அளித்துள்ளதன் ஊடாகவும்;

2024 பெப்ரவரி 26 ஆம் திகதி நடைபெற்ற அரசியலமைப்புப் பேரவைக் கூட்டத்தின் போது பொலிஸ் பரிசோதகர் தலைமை அதிபதி பதவிக்கு சனாதிபதியினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்த பெயர் பரிசீலிக்கப்பட்டபோது, அவ்வாறு சிபாரிசு செய்யப்பட்டிருந்த நபரை அந்தப் பதவிக்கு நியமனம் செய்வதற்காக அரசியலமைப்புப் பேரவை அங்கத்தவர்களில் நான்கு பேர் ஆதரவாகவும், இரண்டு பேர் எதிராகவும் வாக்களித்திருந்த நிலையிலும் அத்துடன் இரண்டு அங்கத்தவர்கள் வாக்களிப்பதிலிருந்து விலகியிருந்த நிலையிலும் மற்றும் அதன்படி, அவ்வாறு சிபாரிசு செய்யப்பட்டிருந்த பெயரை பொலிஸ் பரிசோதகர் தலைமை அதிபதி பதவிக்கு, அரசியலமைப்புப் பேரவையினால் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க அங்கீகரித்திராத நிலையிலும் சனாதிபதி அவர்களுக்கு அது சம்பந்தமாக தெரியப்படுத்தியிருந்த 2024 பெப்ரவரி 26 ஆம் திகதிய கடிதத்தின் 4 ஆம் பந்தியில்,

"எவ்வாறாயினும், அரசியலமைப்பின் 41(உ) உறுப்புரையின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவைக் கூட்டமொன்றில் வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பதற்கான ஏற்பாடுகள் வழங்கப்படவில்லை என்பதால், வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பதானது சட்டத்தின் முன் உரிய விடயத்தை எதிர்ப்பதாக கருதப்படும் பட்சத்தில் மற்றும் அரசியலமைப்பின் 41(உ) (5) ஆம் உறுப்புரையின் பிரகாரம் குறிப்பிட்ட பிரச்சினை மீது சம எண்ணிக்கையிலான வாக்குகள் கிடைத்துள்ளதாக

கருதப்படும் பட்சத்தில் தவிசாளர் என்ற வகையில் எனது அறுதியிடும் வாக்கையும் ஆதரவாக அளிப்பதாக தயவுடன் அறியத்தருகின்றேன்."

எனக் குறிப்பிட்டு அவ்வாறு சனாதிபதியினால் சிபாரிசு செய்யப்பட்ட நபரை சட்ட விரோதமாகவும், அரசியலமைப்புக்கு விரோதமாகவும் பொலிஸ் பரிசோதகர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிப்பதற்கு அரசியலமைப்புக்கு விரோதமான முறையிலும் சட்ட விரோதமான முறையிலும், சனாதிபதிக்கு உடந்தையாகவும், உறுதுணையாகவும், துணையாதரவாகவும் இருந்ததன் ஊடாகவும்;

பாராளுமன்ற நடவடிக்கைகளின் போது அரசியலமைப்பை அப்பட்டமாக மீறும் வகையில் சபாநாயகர் செயற்பட்டுள்ளதாலும்;

பாராளுமன்றம் மற்றும் அரசியலமைப்புப் பேரவை ஆகிய மீயுயர் நிறுவனங்கள் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை இழக்கப்படும் வகையில் சபாநாயகர் செயற்பட்டுள்ளதாலும்;

சபாநாயகர் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை அப்பட்டமாக மீறியுள்ளதாலும்;

சபாநாயகர் பக்கச் சார்பாக செயற்படுகின்றார் என்பதை தெளிவாக வெளிப்படுத்தி சபாநாயகர் பதவியின் சுயாதீனத்துக்கும், மாண்புக்கும் அப்பட்டமாக களங்கம் ஏற்படுத்தியுள்ளதாலும்;

பக்கச்சார்பின்றி சகல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பிலுள்ள சபாநாயகரே பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் மீறியுள்ளதாலும்; மற்றும்

சபாநாயகர் பதவியின் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றத் தவறியுள்ளதாலும்;

சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்கள் மீது மேற்கொண்டும் நம்பிக்கை இல்லை என இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [பா.27/2024]

(மு.ப. 11.23 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ வேலுகுமார் தலைமை தாங்குவாராக" என கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா பிரேரிக்க அதனை கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.11 மணிக்கு கௌரவ வேலுகுமார் தலைமை தாங்கினார்.)

"கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப் தலைமை தாங்குவாராக" என கௌரவ நிமல் லான்சா பிரேரிக்க அதனை கௌரவ ஜே. சீ. அலவதுவல அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.20 மணிக்கு கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப் தலைமை தாங்கினார்.)

"கௌரவ நாலக்க பண்டார கொட்டேகொட தலைமை தாங்குவாராக" என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.37 மணிக்கு கௌரவ நாலக்க பண்டார கொட்டேகொட தலைமை தாங்கினார்.)

"கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்குவாராக" என சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.28 மணிக்கு கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.17 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை மீண்டும் சபைக்கு விடப்பட்டு சார்பாக 75: எதிராக 117 பேரும் வாக்களித்து நிராகரிக்கப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47(2) (ஆ) இன் பிரகாரம் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறையினைப் பயன்படுத்தி நூற்றி என்பத்தேழு (187) பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்வருமாறு வாக்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்:-

| | |
|---|---|
| G 001. Pavithradevi Wanniarachchi | No |
| G 002. Nimal Siripala De Silva | No |
| G 003. Chamal Rajapaksa | No |
| G 004. Mahinda Rajapaksa | No |
| G 005. Prasanna Ranatunga | No |
| G 007. Dinesh Gunawardena | No |
| G 009. Douglas Devananda | No |
| G 010. Bandula Gunawardana | No |
| G 011. Mahinda Amaraweera | No |
| G 012. Wijeyadasa Rajapakshe | No |
| G 013. Harin Fernando | No |
| G 014. Ramesh Pathirana | No |
| G 015. M. U. M. Ali Sabry | No |
| G 016. Vidura Wickramanayaka | No |
| G 017. Kanchana Wijesekera | No |
| G 019. Tiran Alles | No |
| G 020. Nalin Fernando | No |
| G 022. Jeewan Thondaman | No |
| G 023. Ranjith Siyambalapitiya | No |
| G 024. Jagath Pushpakumara | No |
| G 025. Dilum Amunugama | No |
| G 026. Mohan Priyadarshana De Silva | No |
| G 027. Janaka Wakkumbura | No |
| G 028. Shehan Semasinghe | No |
| G 029. Kanaka Herath | No |
| G 030. Thenuka Vidanagamage | No |
| G 031. Pramitha Bandara Tennakoon | No |
| G 032. Lasantha Alagiyawanna | No |
| G 033. Rohana Dissanayaka | No |

| | |
|---|---|
| G 034. Premalal Jayasekara | No |
| G 035. Arundika Fernando | No |
| G 037. Lohan Ratwaththe | No |
| G 038. Tharaka Balasuriya | No |
| G 039. Indika Anuruddha Herath | No |
| G 040. Siripala Gamalath | No |
| G 041. Anuradha Jayaratne | No |
| G 042. S. Viyalanderan | No |
| G 043. D.V. Chanaka | No |
| G 044. Sisira Jayakody | No |
| G 045. Piyal Nishantha De Silva | No |
| G 046. Prasanna Ranaweera | No |
| G 047. D. B. Herath | No |
| G 048. Shasheendra Rajapaksa | No |
| G 049. Seetha Arambepola | No |
| G 051. K. Kadder Masthan | No |
| G 052. Asoka Priyantha | No |
| G 053. A. Aravindh Kumar | No |
| G 054. Geetha Samanmale Kumarasinghe | No |
| G 055. Suren Raghavan | No |
| G 056. Diana Gamage | No |
| G 057. Sivanesathurai Santhirakanthan | No |
| G 058. Chamara Sampath Dasanayake | No |
| G 059. Anupa Pasqual | No |
| G 060. Johnston Fernando | No |
| G 061. S. B. Dissanayake | No |
| G 062. Gamini Lokuge | No |
| G 063. Vajira Abeywardena | No |
| G 064. Janaka Bandara Tennakoon | No |
| G 065. C. B. Rathnayake | No |
| G 066. Keheliya Rambukwella | No |
| G 067. S. M. Chandrasena | No |
| G 068. Mahindananda Aluthgamage | No |
| G 069. Rohitha Abeygunawardana | No |
| G 071. Sarath Weerasekara | No |
| G 072. Wimalaweera Dissanayaka | No |

| | |
|---|---|
| G 075. Kapila Athukorala | No |
| G 076. Gayashan Nawananda | No |
| G 077. S. M. M. Muszhaaraff | No |
| G 078. S. C. Muthukumarana | No |
| G 079. Jayantha Ketagoda | No |
| G 080. Sampath Athukorala | No |
| G 081. Thisakutti Arachchi | No |
| G 082. U. K. Sumith Udukumbura | No |
| G 083. Pradeep Undugoda | No |
| G 084. Sanjeeva Edirimanna | No |
| G 085. Akila Ellawala | No |
| G 086. Jagath Kumara Sumithraarachchi | No |
| G 087. Karunadasa Kodithuwakku | No |
| G 088. Nalaka Bandara Kottegoda | No |
| G 089. Udayakantha Gunathilaka | No |
| G 090. Kokila Gunawardene | No |
| G 091. Milan Jayathilake | No |
| G 092. Kulasingam Dhileeban | No |
| G 093. Sudarshana Denipitiya | No |
| G 094. Isuru Dodangoda | No |
| G 095. Premnath C. Dolawatte | No |
| G 097. Muditha Prishanthi | No |
| G 098. Sudath Manjula | No |
| G 099. Mayadunna Chinthaka Amal | No |
| G 100. Nipuna Ranawaka | No |
| G 101. Kumarasiri Rathnayaka | No |
| G 102. Gunathilaka Rajapaksha | No |
| G 103. Upul Mahendra Rajapaksha | No |
| G 104. M. Rameshwaran | No |
| G 105. Rajika Wickramasinghe | No |
| G 106. M. W. D. Sahan Pradeep Withana | No |
| G 107. Madhura Withanage | No |
| G 108. D. Weerasingha | No |
| G 109. Samanpriya Herath | No |
| G 110. Sagara Kariyawasam | No |
| G 111. Yadamini Gunawardena | No |

| | |
|---|---|
| G 112. Manjula Dissanayake | No |
| G 113. Ranjith Bandara | No |
| G 114. Jayantha Weerasinghe | No |
| G 115. Marjan Faleel | No |
| G 116. Lalith Varna Kumara | No |
| O 001. Rishad Bathiudeen | Yes |
| O 002. Rajitha Senarathne | Yes |
| O 003. Imthiaz Bakeer Markar | Yes |
| O 004. Tissa Attanayake | Yes |
| O 005. Rauff Hakeem | Yes |
| O 006. Gayantha Karunatilleka | Yes |
| O 007. Lakshman Kiriella | Yes |
| O 008. Sajith Premadasa | Yes |
| O 010. Patali Champika Ranawaka | Yes |
| O 011. Palany Thigambaram | Yes |
| O 012. Mano Ganesan | Yes |
| O 015. G.L. Peiris | Yes |
| O 017. A. L. M. Athaullah | No |
| O 022. Kabir Hashim | Yes |
| O 023. Thalatha Athukorala | Yes |
| O 025. Sarath Fonseka | Yes |
| O 026. Harsha De Silva | Yes |
| O 028. R. M. Ranjith Madduma Bandara | Yes |
| O 029. Dilip Wedaarachchi | Yes |
| O 030. Niroshan Perera | Yes |
| O 031. Eran Wickramaratne | Yes |
| O 032. J. C. Alawathuwala | Yes |
| O 033. John Seneviratne | No |
| O 037. Vijitha Herath | Yes |
| O 038. Selvarajah Kajendren | Yes |
| O 041. Angajan Ramanathan | No |
| O 042. Vadivel Suresh | No |
| O 044. Ashok Abeysinghe | Yes |
| O 047. Ajith Mannapperuma | Yes |
| O 048. Buddhika Pathirana | Yes |
| O 049. M. S. Thowfeek | Yes |

| | |
|---|---|
| O 050. Nalin Bandara Jayamaha | Yes |
| O 051. Hector Appuhamy | Yes |
| O 052. Thushara Indunil Amarasena | Yes |
| O 053. Dilan Perera | Yes |
| O 054. Wimal Weerawansa | Yes |
| O 055. Piyankara Jayaratne | No |
| O 056. Vasudeva Nanayakkara | Yes |
| O 057. Harini Amarasuriya | Yes |
| O 058. Govindan Karunakaram | Yes |
| O 061. Velu Kumar | Yes |
| O 062. Kavinda Heshan Jayawardhana | Yes |
| O 063. Mayantha Dissanayake | Yes |
| O 064. K. Sujith Sanjaya Perera | Yes |
| O 065. S. M. Marikkar | Yes |
| O 066. Imran Maharoof | Yes |
| O 068. Harshana Rajakaruna | Yes |
| O 069. Rohini Kumari Wijerathna | Yes |
| O 070. Hesha Withanage | Yes |
| O 071. Waruna Liyanage | Yes |
| O 072. M. Udayakumar | Yes |
| O 073. Jayarathna Herath | Yes |
| O 075. Chandima Weerakkody | Yes |
| O 076. Dayasiri Jayasekara | Yes |
| O 077. Sivagnanam Shritharan | Yes |
| O 078. M. A. Sumanthiran | Yes |
| O 079. Charles Nirmalanathan | Yes |
| O 080. S. Rajaputhiran Rasamanickam | Yes |
| O 081. W. H. M. Dharmasena | Yes |
| O 082. Kins Nelson | Yes |
| O 083. Rohana Bandara | Yes |
| O 084. Nayana Wasalathilaka | Yes |
| O 085. Udaya Gammanpila | Yes |
| O 086. Nalaka Godahewa | Yes |
| O 087. Channa Jayasumana | Yes |
| O 089. Nimal Lanza | No |
| O 090. Jayantha Samaraweera | Yes |

| | |
|---|---|
| O 091. B. Y. G. Rathnasekara | Yes |
| O 092. Sarathie Dushmantha | Yes |
| O 094. Lalith Ellawala | Yes |
| O 096. K. P. S. Kumarasiri | Yes |
| O 097. Upul Galappaththi | Yes |
| O 098. Shan Vijayalal De Silva | Yes |
| O 100. Thavaraja Kalai Arasan | Yes |
| O 101. S. Jagath Samarawickrama | No |
| O 106. Wasantha Yapabandara | Yes |
| O 107. Thilak Rajapakshe | Yes |
| O 108. Gamini Waleboda | Yes |
| O 109. Weerasumana Weerasinghe | Yes |
| O 110. Gevindu Cumaratunga | Yes |
| O 111. Charitha Herath | Yes |

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47 (2) (இ) இன் பிரகாரம் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் பின்வரும் பெயரை அழைப்பதன் மூலம் பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து (05) வாக்களிப்பினை மேற்கொண்டனர்:—

| | |
|---|---|
| Susil Premajayantha | No |
| Vijitha Berugoda | No |
| H. Nandasena | No |
| A. H. M. Fowzie | No |
| V. Radhakrishnan | Yes |

(பி.ப. 4.47 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**11. ஒத்திவைப்பு:** "இப்பாராளுமன்றம் தற்பொழுது ஒத்திவைக்கப்படுமாக"என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

அப்போது நேரம் பி.ப. 5.00 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 5.11 மணிக்கு சபாநாயகர் இன்றைய சபைத் தீர்மானத்தின்படி பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2024 மார்ச் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.